

# தாவோயிசமும்

# வேதாத்திரியமும்

இதனுள்ளே

1. ஒப்பாய்வு இலக்கியம் ஏன்?
2. தாவோயிசமும் வேதாத்திரியமும்
3. தாவோயிசமும் வேதாத்திரியமும் ஒப்பாய்வு
4. ஞானியும் ஞானமும்
5. மழை வாழ்த்து
6. ஐந்தில் அளவு முறை
7. அருள் சுரங்கம்
8. போரில்லா நல்லுலகம்
9. பேராசை வேண்டாமே..
10. மௌனம் எனும் ஞானவரம்வு
11. அன்பின் அடிப்படையில்
12. கொடுங்கோல் ஆட்சி வேண்டாம்
13. ‘இருத்தலின்மை என்பது வானக, வையகத்தின் தோற்றுவாய்
14. மனிதன் மனிதன்
15. நன்மை தீமை
16. முழுமையாய் இருப்பது எப்படி?

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பொருள்களை ஒரு சேர வைத்து, அவற்றிற்கிடையேயுள்ள ஒப்புமையையும், வேற்றுமையையும் பார்ப்பது மனித இயல்பு.

அதுபோலவே, கலை இலக்கியங்களுக்கிடையே ஒன்றுபட்ட பண்புகளைப் பார்ப்பது என்பது படிப்பவரின் மன இயல்பு.

ஒப்பிடுவது என்பது சில கூறுகளில் வேறுபட்டும் சிலவற்றில் ஒன்றுபட்டும் இருக்கின்ற இரண்டு பொருட்களின் மேல் நிகழ்த்துகின்ற ஒரு செயல்.

ஒப்புமைக்கு நேர்மாறான பொருள் சாத்தியம் இல்லை. இரண்டு பொருள்களின் ஒத்த தன்மைகள் ஒப்பீட்டு முறைக்கு வாய்ப்பாக அமையும்.

ஒப்பிடுவதன் நோக்கம், ஒன்றனைவிட இன்னொன்று சிறப்பானது, உயர்வானது என்று பேசுவது அல்ல. ஒவ்வொன்றன் சிறப்பையும் தனித்தனியே அறிவதற்கு ஒப்பீடு என்பது ஒருவழிமுறை அல்லது உத்தியே ஆகும்.

ஒப்பீட்டுத் திறனாய்வின் கருதுகோள்

- ஒத்த சமுதாய வரலாற்றுச் சூழல்களில் அல்லது பின்புலத்தில் பிறக்கும் இலக்கியங்கள் ஒத்த தன்மைகளைப் பெற்றிருக்கக் கூடும்.
- ஏற்புத் திறனைச் சார்ந்து, ஓர் இலக்கியம் இன்னோர் இலக்கியத்தைத் தனது செல்வாக்கிற்கு உட்படுத்தக்கூடும்.
- மொழியாலும், இனத்தாலும் அரசியல்-புவியியல் பரப்பாலும் வேறுபட்டாலும் அத்தகைய வரையறைகளை மீறி, இலக்கியங்கள் தமக்குள் ஒன்றுபட்ட பண்புகளையும் பயன்களையும் பெற்றிருக்கக் கூடும்.
- ஒன்றுபட்டும் வேறுபட்டும் அமைகிற பின்புலங்களிலிருந்து பார்க்கிறபோது, குறிப்பிட்ட இலக்கியத்தின் பண்புகளும் கூறுகளும் தெளிவாகவும் விளக்கமாகவும் காணக்கூடும்.

இந்தக் கருத்து நிலைகளே ஒப்பீட்டுத் திறனாய்வின் கருதுகோள்கள் ஆகும்.

## 2. தாவோயிசமும் வேதாத்திரியமும்

- தாவோயிசம், கி.மு 6-வது நூற்றாண்டில் உருவாகிய சீனத் தத்துவமாகும். வேதாத்திரியம் இருபதாம் நூற்ண்டில் இந்தியாவில் உருவாகிய தத்துவமாகும்.
- ”தாவோயிசம்” என்பது லாவோ சூ என்ற தத்துவ ஞானியாலும், ”வேதாத்திரியம்” அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியாலும் ஸ்தாபனம் செய்யப்பட்டது.

லாவோ சூ என்ற பெயர் ‘வயதான குரு’ அல்லது ‘வயதான பையன்’ என்று பொருள்படும். அவரது வாழ்க்கையைப் பற்றி அதிகம் தெரியவில்லை.

ஏன், அவரே ஒரு கற்பனைப் புருஷர் என்று கூட சிலர் நம்புகிறார்கள்.

அவர் கி.மு. 571 ஆண்டு பிறக்கும் போதே வயதான கிழவராக நரை முடியுடன் மிகுந்த ஞானம் கொண்டவராகப் பிறந்தார் என்று ஒரு கட்டுக்கதை உண்டு.

அவர் அரசாங்க ஏடுகள் பாதுகாப்பு நிலையத்தில் தலைமை நூலகராகப் பணி புரிந்துள்ளார்.

ஆனால் சமூகத்தில் நல்லவர்கள் குறைவாக இருக்கும் நிலை கண்டு அவர் மனம் கலங்கினார்.

ஆகையால்,தமது சொந்த ஊரான லுயோங்கை விட்டு, ஒரு துறவியாக ஊர் ஊராகச் சுற்ற ஆரம்பித்தார்.

யாத்திரையின் இறுதிக் கட்டத்தை அவர் ஒரு நகரத்தின் நுழைவாயிலின் வழியாகச் செல்லும் தருணத்தில் அந்த நகர நுழைவாயிலின் காவல்காரன் அவரை வேண்டினான்:

“லாவோ சூ அவர்களே! நீங்கள் கடைசியாகச் சொல்ல விழையும் எண்ணங்களை எழுதிக் கொடுங்கள்’

லாவோ சூவும் மூன்று நாட்கள் ஒரு சிறிய புத்தகத்தில் தன்னுடைய எண்ணங்களைப் பதிவு செய்து, அந்த காவல்காரனிடம் கொடுத்தார்.

அந்த அவரது புத்தகத்தின் என்ணங்கள் தான் “தாவோ தே சிங்” என்று மிகவும் முக்கியமான தாவோயிசத்தின் நூலாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

அதன் பிறகு அவர் சமூகத்தை விட்டு விலகி, தனது கடைசிக் காலத்தை திபெத்தில் கழித்ததாக நம்பப்படுகிறது.

லாவோ சூவின் பிரபலமான பொன் மொழி இதோ:

- மற்றவர்களை வெல்வது பலம். ஆனால், உன்னையே வெல்வதோ உண்மையான சக்தி.

இதைத்தான் “நான் யார்” என்பதை தெரிந்து கொள் உணர்ந்து கொள் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் அதை பயிற்சியாகவும் மனவளக்கலையில் வேதாத்திரியம் தந்துள்ளது.

லாவோ சூவின் வாழ்க்கை வரலாறு மர்மமாக இருந்தாலும், வேதாத்திரி மகரிஷியின் வாழ்க்கை வரலாறு மிகவும் நன்கு தெரிந்த ஒன்றாக இருக்கிறது.

இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும் மனித வாழ்க்கையைப் பற்றியும் தவநிலையில் தான் பெற்ற கருத்துக்களைப் பல கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு மகரிஷி அவர்கள் அளித்துள்ளார்கள்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த தமிழ்ப்பாடல்களை இயற்றியிருக்கிறார்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் தனது தத்துவங்களை எடுத்துரைத்தார். எல்லா மதங்களின் சாரம் ஒன்றே என்பதை மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.




1957ல் மகரிஷி 'உலக சமாதானம்' என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார். தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு இவருக்குக் கிட்ட அங்கெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட 1958-ஆம் ஆண்டில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம்

வேதாத்திரி மகரிஷி சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகள் ஞானக்களஞ்சியமாக உலகில் உலா வந்து கொண்டிருக்கின்றன.

80க்கும் மேற்பட்ட உரைநடை நூல்களையும் மானுடத்திற்கு தந்துள்ளார் மகரிஷி..

உலகெங்கும் உள்ள அறிவுத்திருக்கோயில்களிலும், மனவளக்கலை மன்றங்களிலும் ஏன் சுமார் 30 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் வேதாத்திரியம் பாடத்திட்டமாகப் போதிக்கப்பட்டு வருகிறது.

தற்போது இணையம் வழியாக ஆன்லைன் வகுப்புகளிலும் வேதாத்திரியம் பயிற்றுவிக்கப்படுகிறது. (vethathiriam for World Peace – YouTube · SKY Yoga TV)

இன்று இந்தியாவிலும், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

வேதாத்திரி மகரிஷி ஏறக்குறைய தமிழிலும் ஆங்கிலத்திலும் சேர்த்து எண்பது நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் சில:

1. வேதாத்திரியத்தின் இறைநிலை விளக்கம்
2. வாழ்வியல் விழுமியங்கள்
3. பிரம்மஞான சாரம்
4. நான் யார் ?
5. ஞானக்களஞ்சியம்

கொங்கு நாட்டில் பொள்ளாச்சி நகருக்கு அருகே வால்பாறை மலையோரத்தில் ஆழியாறு நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்தில் அருட்பெருஞ்ஜோதி நகர் எனும் நகரம் வேதாத்திரி மகரிஷியால் 1984 கால கட்டத்தில் அமைக்கப்பட்டது.



*அன்பொளி* என்னும் ஆன்மீக இதழ் ஒன்றையும் வெளியிட்டார். இன்றும் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெளிவருகின்றன.

வறுமையிலேயே வாழ அடியெடுத்து வைத்த வேதாத்திரி மகரிஷியின் உள்ளத்தில்

- வறுமை என்றால் என்ன?
- கடவுள் என்பது எது?
- அதை ஏன் காண முடியவில்லை?
- மனித வாழ்க்கையிலேயே ஏன் துன்பங்கள் தோன்றுகின்றன

போன்ற கேள்விகள் அவ்வப்போது ஒலித்துக் கொண்டே இருந்தன.

இவற்றிற்கு காரணங்கள் கண்டு தெளிவு பெறுவதற்காக ஆராய்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

விளைவாக தனது 35வது வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலையை உணர்ந்தார்.

அதன் அடிப்படையில் உலக மக்களுக்காக அவர் அளித்த வாழ்க்கை நெறியே **மனவளக்கலை** ஆகும்.

46 ஆம் அகவையில் உலக அமைதிக்காக 'உலக சமாதானம்' World peace என்ற 200 பாடல்கள் நூலை எழுதி 1957ல் வெளியிட்டார்.

இந்த இருமொழிகள் (தமிழ், ஆங்கிலம்) நூலை பாடத்திட்ட வழி பள்ளி, கல்லூரிகளில் பரப்ப வாழ்நாள் இறுதிவரை உழைத்து வெற்றி பெற்றார்.

இன்று பல பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு, மேல்பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப்படிப்பில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

## வேதாத்திரியம்

உலகில் மனித குலம் சிறப்பாக வாழ, உண்மை நிலை உணர்ந்து உயர்வான வாழ்க்கை நெறிமுறைகளைக் கண்டு அனுபவித்து, அதன் வழி வாழ்ந்து மற்றவரும் சிறப்பாக, அமைதியோடு வாழ வழிகாட்டியவர்கள் பலர்.

அவர்களில் அறிஞர்கள், தத்துவ மேதைகள், விஞ்ஞானிகள், மெய்ஞானிகள் அனைவரையும் நினைவு கூர்ந்து, வாழ்வியல் சிந்தனைகள், செயல் திட்டங்களை, மனித குலம் எளிமையாக புரிந்து கொண்டு, உணர்ந்து வாழ அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி எனும் வள்ளல் அருளிய அரிய கொடைதான் ."வேதாத்திரியம்".

வேதாத்திரியத்தில், அரசியல், ஆன்மீகம், அறிவியல், பொருளியல், கலை, இலக்கியம், கல்வி, மொழியியல், வேளாண்மை, இல்லறம், குழந்தையியல், உடலியல், பாலியல், இசை, ஒழுக்கவியல் போன்றவை பற்றிய தெளிவான தீர்க்க தரிசனமாகத் தீர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது வியப்பிற்குரியதாகும்.

லாவோ சூவும் கன்பூஷியஸும் ஒருவரை ஒருவர் சந்தித்துள்ளனர். அவர்கள் அரசாங்க இலக்கிய கருவூலங்களைப் பற்றி உரையாடினதாகச் சொல்லப்படுகிறது.

அப்போது கன்பூஷியஸின் நேர்த்தியான உடை லாவோவை வசீகரிக்க வில்லை. மேலும், கடந்த கால உரைகளை மீண்டும் உரைப்பதை லாவோ ஆதரிக்கவில்லை.

‘உன்னுடைய போலி பவ்வியமான பாவனைகளையும், ஆடம்பர ஆடைகளை வெளிப்படையாக விளம்பரம் செய்வதையும் தவிர்.

அறிவாளியாக இருப்பவன் தெரியாதவர்களிடம் தனது செல்வங்களை காட்ட மாட்டான். பழைமையான நூல்களிலிருந்து அவன் நியாயத்தை கற்க முடியாது.’

ஆனால் இதற்கு நேர்மாறாக, கன்பூஷியஸ் லாவோ சூவினால் ஈர்க்கப்பட்டார். ஆகையால் தான் லாவோ சூவை இப்படிப் புகழ்ந்துள்ளார்:

“ஒரு ட்ராகன் ஆகாயத்தில் காற்றிலும், மேகத்திலும் பயணிக்கிறது.”

தாவோயிசம், வேதாத்திரியமும்  – இரண்டும் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு நாடுகளிலும் தோன்றினாலும் முக்கிய தத்துவமாக, மானுடத்தை வழி நடத்திச் செல்கிறது.

தாவோயிசமும் வேதாத்திரியமும்  இரண்டும்,  வாழ்வின் வழிமுறைகளை மக்களுக்கு கற்பிக்கின்றன.

சமூகம், சொர்க்கம், பிரபஞ்சம் ஆகியவைகளைப் பற்றிய பல தகவல்களை இந்த இரண்டு தத்துவங்களும் விளக்குகின்றன.

தாவோயிசத்தின் மூல எழுத்து தாவோ  என்பதாகும். அந்த எழுத்திற்கு – இயற்கை, பிரபஞ்சம் அல்லது கடவுள் வழி என்று அர்த்தம்.

அது தான் தாவோ வழியாகும். தாவோ வழி என்றால் – எதையும் மீறாதே, எதையும் ஊக்குவிக்காதே என்பதாகும்.

தாவோ ‘சரி – தவறு’ என்பதற்கு அளவுகோலுக்கான தரநிலையை நிர்ணயிக்கிறது.

- இயற்கையை ஆராதித்து, அந்த வாழ்க்கை மூலமாக தன்னைச் சுற்றியுள்ளவைகளின் மதிப்பை மதித்து, உள் ஒளியைப் பெருக்கி வாழ ஊக்கப்படுத்த வேண்டும் என்பது தான் தாவோஸ்டுகளின் குறிக்கோளாகும்.
- இதே போல் வேதாத்திரிய தத்துவத்தின் முக்கிய மந்திரச் சொல் "வாழ்க வையகம் வாழ்க வளமுடன்" என்பதாகும்.
- ஆகையால் வேதாத்திரியத்தின் முக்கியமான கொள்கையாக மனிதர்-சமூகம் இரண்டுக்குள்ள உறவைப் பற்றியது என்று கணிக்கலாம்.
- நேர்மையான சமூக நீதிகளை நாட்டினில் ஏற்படுத்துவது வேதாத்திரியத்தின் முக்கிய அம்சமாகும்.
- அரசு – மக்கள், கணவன் – மனைவி, வயதானவர் – இளையவர்கள், நண்பன் – நண்பர்கள், அப்பா – மகன் ஆகியவர்களிடையே சிறந்த நல் உணர்வுகளைப் பேணி

மற்றவர்களுக்கு வழிகாட்டுவதின் அவசியத்தை வேதாத்திரியம் சுட்டிக் காட்டுகிறது.

- ஆனால், தாவோயிசத்தில் இந்த அறவுரை சொல்லப்படவில்லை.
- தாவோயிசத்தில் பெண்கள் – ஆண்கள் என்ற பேதம் இல்லாமல் அவர்களை சரிசமமாக சமூகத்தில் பார்க்கப்படுபவர்களாகச் சித்தரிக்கப்படுகிறார்கள்.
- ஆனால் வேதாத்திரியத்தில் பெண்கள் ஆண்களை விட சிறப்பானவர்களாகவே சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.
- தாவோயிசம் இயற்கையுடன் நல்லிணக்கம் கொள்ள விழைகிறது.
- வேதாத்திரியம் சமூகத்துடன் நல்லிணக்கம் கொள்ள விழைகிறது.
- தாவோயிசம் தனி மனிதனையும், வேதாத்திரியம் சமூகத்திலுள்ள அனைத்து தரப்பினரையும் மனிதர்களையும் குறித்துச் செயல்படுகிறது.
- தவோயிசத்தின் மூன்று ஆதார போதனைகள் – கருணை, சமநிலை, பணிவு.
- வேதாத்திரியத்தின் மூன்று ஆதார போதனைகள்: தனி மனித அமைதி, குடும்ப அமைதி, உலக அமைதி.
- தாவோயிசத்தில் கோவிலுக்குச் செல்லல், சடங்குகளைக் கடைப்பிடித்தல், பேய்-பிசாசுகளை நம்புதல் ஆகியவைகளுடன், 'சி' (Chi ) என்ற அனைத்து ஜீவன்களுக்கும் சக்தியைக் கொடுக்கும் இந்த சி யை உடம்பில் நிலை நிறுத்த தாய் சி ( Tai Chi ) என்ற தற்காப்புப் பயிற்சி மூலம் உடல் – மனம் ஆகிய இரண்டையும் பலப்படுத்தவேண்டும் என்று அறிவுருத்துகிறது.
- ஆனால், வேதாத்திரியத்தில் உடல் நலம், மனநலம், உயிர் நலம், மூன்றையும் வளப்படுத்த வேண்டும் என்று இதற்கான பயிற்சியையும் ஊர்தோறும மனவளக்கலை மன்றங்கள் மூலமாக கற்பித்து வருகிறது.

## 3. தாவோயிசமும் வேதாத்திரியமும் ஒப்பாய்வு

இங்கு வெவ்வேறு நாட்டைச் சேர்ந்த இரண்டு பெரும் தத்துவஞானிகளை ஒப்பாய்வு செய்வதால் நமது அருள்தந்தை வேதாத்திரி மகரிஷியின் வேதாத்திரியப் பண்புகளை சிறப்புகளை பெருமைகளை சிறப்பாகவும், நிறைவாகவும் புரிந்து கொள்ள முடிகிறது.

மேலும் உலகம் முழவதும் வேதாத்திரியத்தின் பெருமையை கொண்டு செல்ல இயலும்.

- லாவோட்சு : சீனாவை சார்ந்தவர். 2500 ஆண்டுகளுக்குமுன் 5,6 □□□ இல் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது. அவர் எழுதிய நூல் "தாவோ தே ஜிங்" (□□□ □□ □□□□□). தாவோயிசம் எனும் மதத்தின் அடிப்படை நூல் இதுவே.
- வேதாத்திரி மகரிஷி தென்னிந்தியாவை (தமிழகம்) சார்ந்தவர். 1911 லிருந்து  2006 ஆம் ஆண்வரை 95 ஆண்டுகள் வாழ்ந்தவர். அவர் எழதியது பேசியது பாடியது அனைத்தும் வேதாத்திரியமாக மலர்ந்தது.
- லாவோட்சு எழுதிய தாவோ தே ஜிங் –இல் எளிமையான வாழ்க்கை, உயிர்களின் மூலம், பற்றின்மை பற்றியும் போர், அதிகாரம், தண்டனை, ஆயுதம் ஆகியவற்றிற்கு எதிரான கருத்துகளும் காணப்படும். மொத்தம் 81 வசனங்களை கொண்ட சிறிய நூல்.
- வேதாத்திரியமோ தமிழில் கிடைக்கபெற்ற நூல்களில் வாழ்க்கைக்கு பயனுள்ள, இல்வாழ்க்கை முதல் ஞானத்தை நோக்கிய தவம், துறவு வரையும் அரசியல், பொருளாதாரம், உலக அமைதி வரை சொல்லுகிறது.
- லாவோட்சு'வும் வேதாத்திரி மகரிஷியும் மிகச்சிறந்த கவிஞர்கள், எழுத்தாளர்கள், தத்துவவாதிகள் மட்டுமல்ல இருவரும் தலைசிறந்த மெய்யியலாளர்கள், ஞானிகள். இவர்கள் ஞானத்தின் வெளிப்பாடே இந்த நூல்கள்,
- ஞானமடைந்தவர்களின் சொற்களே இந்த நூல்கள். வெவ்வேறு நாடு வெவ்வேறு மொழி என்றபோதிலும் இவற்றிலும் சில ஒற்றுமைகள், ஒத்த கருத்துக்கள் காணப்படுகிறது.

# 4 ஞானியும் ஞானமும்

## தாவோ தே ஜிங் – வசனம் 7 :

- ஞானி தன்னை பின்னால் இருத்திக்கொள்கிறான்;அதனால், அவன் முன்னாள் இருக்கிறான்.ஞானி 'தன்' நினைப்பு இல்லாமல் இருக்கிறான்;அதனால், அவன் தன்னை தக்க .ஞானிக்குத் 'தன்' நலத்தில் அக்கறை இல்லாததால்தானேஅவன் சுய-நலம் நிலைநிறுத்தப்படுகிறது?

## வேதாத்திரியத்தில் ஞானி, ஞானம்  விளக்கம்

ஞானநிலை இல்லத்தில் வாழ்வோர் கட்கு
    நல்லதல்ல, கிட்டாது. வேண்டு வோர்க்கு
கானகமே தகுதி எனவும் கற்பித்த,
    கருத்தேற்ற காலமது மாறிப் போச்சு!
மோனநிலையில் இருந்த இயற்கை ஒன்றே
    முடிவாக, மனித அறிவின் உயர்வில்
தானடைந்த பரணாமமே பிரஞ்ச
    தத்துவங்கள் என்றறிந்தோர் பெருகி விட்டார்!” (ஞாக.பா.1384)

ஞானம் என்றால் மனஇயக்க இயல்பறிந்து,
    நான்என்ற இயற்கைத் தத்துவம் உணர்ந்து,
மோனமென்ற ஒன்றாயும், மோகமாதி
    மூவிரண்டு குணங்களாய்ப் பரிணா மத்தால்
ஆனபொருள் அனைத்திலும், தான் அறிந்து நிற்கும்
    அளவாயும் அமையும்அறிவெல்லை கண்டு
மானம், மரியாதை, உடல் ஒழுக்கம் காத்து,
    மனிதரிடை மனிதராய் வாழ்தல் ஆகும்.” (ஞாக.பா.1387)

# 5.மழை வாழ்த்து

## தாவோ தே ஜிங் – வசனம் 8

- மிகச்சிறந்த நல்லதன்மை, நீர் மாதிரி;
- நீர் எல்லாப் பொருளுக்கும் நன்மை செய்கிறது.என்றாலும், அது எதனுடனும் போட்டியிடுவதில்லை. தாழ்வு என்று மற்றவை நினைக்கிற இடங்களில் அது தங்கியிருக்கிறது.
- எனவே, நீர் தாவோவிற்கு நெருக்கமாக இருக்கிறது....

## வேதாத்திரியத்தில் மழை வாழ்த்து

ஏரி, குளம், கிணறு, ஆறு
 எல்லாம் நிரம்பி வழிய,
மாரி அளவாய் பொழக!
 மக்கள் வளமாய் வாழ்க!” (ஞாக.பா.1854)

# 6.ஐந்தில் அளவு முறை

## தாவோ தே ஜிங் – வசனம் 12

- ஐந்து நிறங்கள் கண்ணைக் குருடாக்கும்
- ஐந்து ஸ்வரங்கள் காதைச் செவிடாக்கும்.
- ஐந்து சுவைகள் நாக்கை கெடுக்கும்.
- குதிரை பந்தயமும் வேட்டையும் மனிதனை பைத்தியமாக்கும்.
- விலைமதிப்பற்ற பொக்கிஷங்கள் மனிதனின் நடத்தையை சீர்குலைக்கும்.
- எனவே, ஞானி புலங்களை விடுத்து உள்ளிருப்பதன்படி கவனித்து நடத்தப்படுகிறார்
- ஆகவே அவர் புறத்திருப்பதை விடுத்தது உண்மையை தேர்வுசெய்கிறார்.

## வேதாத்திரியம் தரும் தெளிவு

“உண்மைப் பொருள் விளக்கி, ஒழுக்கத்தைக் கற்பிக்க.
 உழைத்தோர்க்கு இதுவரையில் உலகளித்த பரிசு என்ன?
பெண்மை பலியிட்டுப் பேராசையைத் தூண்டி
 பேசியவர் எழுதியவர் பெற்றார் செல்வம் கீர்த்தி,
திண்மை உளத்தில் கொண்டு சிந்தித்துத் திட்டமிட்டும்
 சிறப்பளிப்போம் இனியேனும் சீர்திருத்தக் கருத்துகட்கு
வண்மை, வாய்மை, தூய்மை, வளர்த்து வாழ்வைத் திருத்தி,
 வாழ்விலில் வளம் காண வாரீரே! இளைஞர்களே!”
(ஞாக.பா.1854)

“புலனுணர்வு, உயிருணர்வு, பரநிலை உணர்வு,
 பொருந்தி புகுந்தாரய்ந்து உண்மைநிலை கண்டேன்.
பலனுணர்ந்த போதுபல இயக்கங்கட் குள்ளே
 பரவிளங்கும் உட்பொருளாய் அறிவுஒன்றே கண்டேன்.
தலமுணர்ந்த காலம் அளவறிந்து ஆற்றா ததனால்
 தன்முனைப்பு பாவப்பதிவு மயக்கம் மூன்றாச்சு! இம்
மலமுணர்ந்தபோது போக்கும் வகையும் அறிந்தேன். இந்த
 மண்ணுலகில் மக்கள் உய்ய மார்க்கம் உரைப்பேன்!”
(ஞாக.பா.732)

## வேதாத்திரியம் தரும் ஐந்தில் அளவு முறை (Proper usage of five senses)

- உணவு, உழைப்பு, உறக்கம், பாலுறவு, எண்ணம் இவற்றில் அளவோடும், முறையோடும் செயலாற்ற வேண்டும்.
- இந்த ஐந்தில் ஒன்றைக் கூட அலட்சியம் செய்வது கூடாது. அதாவது அடியோடு தடைப்படுத்தவோ, மிகவும் குறைத்து விடவோ கூடாது; மிகுதியாகவும் கொள்ளக் கூடாது; முரண்பாடாக அனுபவிப்பதும் கூடாது.
- விழிப்பு நிலையோடு மிதமாக உணவு, உறக்கம், உழைப்பு, உடலுறவு, எண்ணம் எனும் இவ்வைந்தோடு செயல்புரிய வேண்டும்.

- இதனால் துன்பம் எழாமல் காக்கலாம். இயற்கையாக எழும் ஒரு துன்பத்தைக் குறைத்துக் கொள்ளும் அனுபவமே ஒரு இன்ப உணர்வு ஆகும்.
- இன்பத்தை நாடி மிகுதியாக இவற்றை அனுபவிக்கும்போது, உயிராற்றல் மிகுதியாகச் செலவாகி அதன் விளைவாகத் துன்பம் தோன்றும், துன்பம் மிகும். ஐம்புலன் கருவிகளின் நலமும், பொதுவாக உடல் நலமும் கெடும்.
- மேலும், மனிதன் தனது உயிராற்றலின் மதிப்புணர்ந்து அதைப் போற்றிக் காத்து வரவேண்டும்.
- மனிதனுக்கு உயிராற்றல் தான் ஒரு பெரும் நிதி. உடல் உறுப்புக்களாலும், ஐம்புலன்களாலும் ஆற்றும் செயல்களில் உயிராற்றலானது அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்னும் பஞ்சதன் மாத்திரைகளாக மாற்றம் பெற்றுச் செலவாகிக் கொண்டே இருக்கிறது.
- இந்த உயிராற்றல் மிகுதியாகச் செலவாகாமல் காத்துவர வேண்டியது அவசியம்.

ஐம்புலன்கள் மூலமாக உயிராற்றல் மிகுதியாகச் செலவானால்

(1) ஐம்புலன் கருவிகள் கெடும்
(2) உயிராற்றலின் அளவும், அழுத்தமும் உடலில் குறைந்து உடல்நலம், மனநலம் இரண்டும் குழப்பமடையும்.

இதன் அவசியத்தையே திருவள்ளுவர், "சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றமென்றைந்தின்வகை தெரிவான் கட்டேயுலகு" – என்று அருளியதையும் நினைவு கூற வேண்டும்.

விழிப்பு நிலையோடு ஐம்புலன்களின் இயக்கத்தை அளவுபடுத்திக் கொள்வதால் துன்பம் எழாமல் காக்கலாம்; நிலையான இன்பத்தையும் அனுபவிக்கலாம்.

நெறியுடன் வாழும் இத்தகைய வாழ்க்கை முறையால், தானும் நலமுடன், மகிழ்ச்சியுடன், அமைதியுடன் வாழலாம்; பிறரையும் நமது உதவியால் நலமாக வாழ வைக்கலாம்

## வேதாத்திரியம் தரும் புலனடக்கம்

முதன்முதலாகச் சிந்திரம் எழுதப் பழகுபவனுக்கு எண்ணத்தில் உள்ளபடி உருவம் அமைவதில்லை.

பழகப் பழக எந்தவிதமாக எண்ணுகிறானோ, அவ்விதமே அவன் எழுதும் உருவமும் அமைந்து விடுகிறது.

இதுபோன்ற ஆராய்ச்சி முடிவுகளின் அறிவின் விழிப்புடன் செயலாற்ற வேண்டுமென முயற்சிப்பவர்களுக்கு ஐம்புலன்களும் உடனே கட்டுப்பட்டுவிடா.

பழகப்பழக, எதை எண்ணுகிறார்களோ அவ்விதத்திலேயே செயலாற்றும் திறமையும், வல்லமையும் ஏற்பட்டுவிடும்.

ஆகவே பொறுமையோடு திடமனத்துடன் நீடித்துப் பழகி இலட்சிய எல்லையை அடைய வேண்டும்.

# 7.அருள் சுரங்கம்

### தாவோ தே ஜிங் - வசனம் 20 :

உண்டு என்பதற்கும் இல்லை என்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது?

நன்மை என்பதற்கும் தீமை என்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது?

எதற்கு மற்றவர்கள் பயப்படுகிறார்களோ அதற்கு நாம் பயந்தாகவேண்டும்!!

அவைதான் எத்தனை எத்தனை!

பொதுவாக மக்கள் ஆனந்தமாக இருக்கிறார்கள் ஏதோ விருந்தை அனுபவிப்பது மாதிரி;

அல்லது வசந்த காலத்தில் உல்லாசப்பயணம் போகின்றவர்கள் மாதிரி;

நான்மட்டும் சலனமற்று இருக்கிறேன்,
என்ன என்று காட்டிக்கொள்ள முடியாத, இன்னும் சிரிக்கமுடியாத சிசு மாதிரி;

கதியில்லாமல், போவதற்கு வீடு இல்லாத மாதிரி......
................................நான்மட்டும் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு இருக்கிறேன்.
ஆனால் நான் அன்னையால் (தாவோ) ஊட்டமடைகிறேன்.

## வேதாத்திரியத்தில் இறையுணர்வும் அறநெறியும்

இறையுணர்வும் அறநெறியும் பேறாய்ப் பெற்ற,
எவருக்கும் எண்ணம்சொல் செயல்கள் மூன்றில்
மறைபொருளே பொருத்தமுள விளைவாய்த் தோன்றி,
மனதுக்கு இன்பதுன்பம் அமைதி என்னும்
நிறைவுதரும். திருவருளின் நடனம் காண்பார்.
நேர்வழியில் செயல்செய்தே விளைவைக் கொள்வார்.
குறையேது? எதனை எவரிடம் கேட்டுப் பெறுவதற்கு?
குற்றமற்ற குணக்குன்று அருள் சுரங்கம்!" (ஞாக.பா.732)

இறையுணர்வும் அறநெறியும் இன்றிமக்கள் வாழ்வு
ஏற்றபடி அமையாது என்ற உண்மை கண்டேன்.
மறைமுகமாய் முற்காலத்தோர் அறிவுக் கேற்ப
மதித்திடவும் ஒழுகிடவும் கருணையுள்ளம் கொண்டார்.
குறையெனினும் வேறுவழி இன்றி அந்தக்காலம்
கொடுத்தார்கள் இறைநிலைக்கு உருவங்கள்
பெயர்கள்.நிறைவாழ்வுக்கு அறம்புரியும் சொர்க்கஆசை காட்டி,

நெறிபிறழ்வோர் அச்சமுற நரகமும் கற்பித்தார்." (ஞாக.பா1339)

# 8.போரில்லா நல்லுலகம்

## தாவோ தே ஜிங் - வசனம் 31 :

- ராணுவ வெற்றிகளில் தாவோ மனிதன் மகிழ்ச்சியடைவதில்லை.

- அவன் அவற்றில் மகிழ்ச்சியடைந்தால் மக்களின் படுகொலையில் அவன் மகிழ்ச்சியடைகிறான் என்று அர்த்தம். மக்களின் படுகொலையில் மகிழ்ச்சியடைகிற மனிதன் தன் சித்தத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாது.

## வேதாத்திரியத்தில் போர் நீங்கிய நீதி

"உலகம்நீர், காற்றுவெயில், உணவுவித்து அனைத்தும்
உலகில்எந்த மனிதனுமே செய்ததில்லை. அறிவோம்
சிலமக்கள் குழுகுழுவாய்ச் சேர்ந்துபிற குழவைச்
சினங்கொண்டு. கொன்று வாழ்வைச் சீர்குலைக்கும் போரால்
பலகாலத் தும் மக்கள் படும்துன்பம் நோக்கிப்
பாருங்கள்! குற்றமெங்கே? நீதியெங்கே? சொல்வீர்
நலநோக்கில் மனிதகுலத் துன்பங்கள் போக்கி,
நாடனைத்தும் ஒன்றுபட்டு வாழவழி காண்பீர்," (ஞாக.பா.252)

ஒரு தாவோ மனிதன் - ஞானி பிற உயிரை கொள்ளும் போர்களில் மகிழ்ச்சி கொள்வதில்லை.

அப்படி மகிழ்கிறவன் முழுமையடைவதில்லை என்று கொல்லாமையை பற்றி சொல்கிறார்.

வேதாத்திரியம் போரின் கொடுமைகளைச் சொல்லி ஒருலக ஆட்சி வேண்டும் என்கிறார்.

# 9.பேராசை வேண்டாமே..

## தாவோ தே ஜிங் – வசனம் 46 :

- மனிதர்கள் ஆசைப்படுவதை தேடிக்கொண்டிருப்பதைவிட பெரிய குற்றம் வேறு எதுவுமில்லை;
- மனநிறைவை அறியாமலிருப்பதைவிடப் பெரிய துயரம் வேறு எதுவுமில்லை;
- பேராசைக்கு இடம்கொடுப்பதைவிட பெரிய கேடு வேறு எதுவுமில்லை.
- எனவே, மனநிறைவை அறிகிற மனநிறைவு எப்போதும் மனநிறைவுடன் இருக்கும்.

## வேதாத்திரியத்தில் ஆசை சீரமைத்தல்

மனம் வெகு வேகமாக இயங்கக் கூடியது. ஒரு நொடியில் பல நூறு ஆசைகளை மனத்தால் உருவாக்கிக் கொள்ள முடியும்.

நிறைவேற்ற முடியாத ஆசைகளை எல்லாம் அதிகமாக மனம் உருவாக்கிக் கொண்டே இருப்பதனால் நாளுக்கு நாள் மனம் தளர்ச்சி அடைந்து கொண்டே போகிறது. வாழ்க்கையிலே வெற்றி கிட்டுவதில்லை.

விரக்தி, வெறுப்பு முதலியவை உண்டாகின்றன.

ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமானால், எம்மாதிரியான ஆசைகளை நிறைவேற்ற இயலும் என எண்ணிப் பார்த்து ஆசைகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கான முறையான பயிற்சியே ஆசை சீரமைத்தல் என்பதாகும்.

இந்தப் பயிற்சியை ஊரெங்கும் உள்ள மனவளக்கலை மன்றங்களில் கற்றுக் கொள்ளலாம்.

வாயு வேகம், மனோ வேகம் என்று சொல்வார்கள். மனம் வெகுவேகமாக இயங்கக்கூடியது.

ஒரு நொடியில் பல நூறு ஆசைகளை உருவாக்கிக் கொள்ள முடியும். அவ்வளவு ஆசைகளையும் உடலைக் கொண்டுதானே நிறைவேற்ற வேண்டும்?

அதோடு அந்த ஆசைகளுக்குச் சமுதாய ஒப்புதல், இயற்கையின் ஒத்துழைப்பு ஆகியனவும் வேண்டும்.

ஆசைப்பட்டுக் கொண்டு இருப்பதனாலேயே நாளுக்கு நாள் மனம் தளர்ச்சி அடைந்து கொண்டே போகிறது;

வாழ்க்கையில் வெற்றி கிட்டுவதில்லை. விரக்தி, வெறுப்பு ஆகியவை உண்டாகின்றன.

ஆசையைச் சீரமைத்துக் கொள்ளும்போது, மனம் மிகவும் இலேசாகி விடுகின்றது. ஆயிரமாயிரம் ஆசைகளை உருவாக்கி, அடக்கி வைத்துக் கொண்டு, உள்பாரம் கொண்டிருந்த நிலைமாறி, அந்தப் பளு இல்லாததனால் மனம் அமைதியாக இருக்கும்.

ஆசையின் மறுமலர்ச்சியே அறுகுணங்கள். ஆசை தடைப்படும்போது அத்தடையை நீக்க எழும் ஆர்வமே சினம்.

ஆசையுள்ள பொருட்களைத் தனக்கு வேண்டுமெனவும் பிறர் கவராமலும் பாதுகாத்துக் கொள்ளும் செயலே கடும் பற்று.

ஆணுக்குப் பெண் மீதோ, பெண்ணுக்கு ஆண்மீதோ முறையற்ற விருப்பம் எழுவது அதுவே மோகம்.

ஆசை பொருள், செல்வாக்கு, புகழ் இவற்றின் மீது அழுந்தி, அதைக் கொண்டு மக்களை உயர்வாக அல்லது தாழ்வாகக் கருதுவது மதம்.

சினத்தை முடிக்க வலுவையும் வாய்ப்பையும் நாடி நிற்கும் ஆசைதான் வஞ்சம்.

பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகியன அறுகுணங்கள் எனப்படும்.

- ஆசையைச் சீரமைப்பது எப்படி? ஒவ்வொருவருக்கும் முக்கியமான சில ஆசைகள் இருக்கலாம். சின்னஞ்சிறிய ஆசைகள் பலவும் வந்து போகும்.
- இந்த ஆசைகள் தேவைதானா?
- நிறைவு செய்து கொள்ள வசதி இருக்கிறதா?
- தேவை இல்லாத ஆசை எழுந்து, அதை நிறைவு செய்தால் பல துன்பங்கள் வரும்.
- ஆசையின் இயல்பறிந்து, அதை நலம் விளைக்கத் தக்க வகையில் பண்படுத்தி-ஒழுங்குபடுத்தி விட்டால், அதுவே ஞானமாக மலரும்.

எனவே, ‘தேவையில்லாத ஆசையை விட்டு விடுவேன்’ என்று எண்ணிச் சங்கல்பம் மேற்கொள்ள வேண்டும்.

மீண்டும் ஒரு முறை அதே ஆசை எழுமேயானால், முன்பே எடுத்து வைத்திருக்கும் முடிவும் கூடவே வந்து, அந்த ஆசை காலப்போக்கில் மறைந்து விடும்.

தேவையும் வசதியும் ஒருங்கே இருந்தபோதிலும் கூடப் பின்விளைவு தீங்கு அளிக்குமெனில், அந்த ஆசையையும் விட்டு விட வேண்டியதுதான்.

ஆசையை நிறைவு செய்யாமல் வாழமுடியாது என்று கண்டால், இந்த இடத்தில் மற்றொரு வினாவைப் போட வேண்டும்.

எடுத்துக்காட்டாக அலுவலகம் செல்ல, காய்கறிக் கடைக்குச் செல்ல, பேருந்துக்காக நீண்ட நேரம் செலவழிப்பதைத் தவிர்க்க,

இருசக்கர வாகனம் ஒன்று அவசியம் என்று கருதுகிறீர்கள் என்றால், அதை வாங்க வேண்டியதுதான்.

அதை வாங்கத் தேவையான அளவு பணம் இருக்குமேயானால் வாங்கலாம். இல்லையென்றால், அந்த ஆசையை ஆராய்ந்து சீரமைக்க வேண்டும். ஆசையை அடக்கினால் அடங்காது, உணர்ந்து ஆராய்ந்து அதனைப் பிறந்த இடத்திலேயே ஒடுங்கச் செய்ய வேண்டும்.

அதே சமயம் இருசக்கர வாகனம் வாங்கப் பணம் இல்லையே என்று, வட்டிக்குக் கடன் வாங்கி வாங்கினோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த வட்டியைக் கட்டும்போது தான் சுமை தெரியும்.

இருசக்கர வாகனம் வாங்கக் கொடுத்ததைவிட அதிகமாக வட்டி கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

அதனால் பயன் என்ன? என்று பார்த்தால் இருசக்கர வாகனம் வாங்கியபின் விளைந்தது பெரும்பாலும் தீமையேயாகும்.

எனவே, ஓர் ஆசையை நிறைவேற்றுவதற்கு முன்

- இந்த ஆசை தேவைதானா?
- நிறைவு செய்ய முடியுமா?
- முடியும் என்றால் பின் விளைவு எத்தகையது?
- என்று பட்டியலிட்டு அனைத்தும் சரியாக இருக்குமேயானால், ஆசையை நிறைவேற்றிக் கொள்ளலாம்.
- இதுவே நன்மை பயக்கும்.
- நிறைவு செய்ய முடியாத நூறு ஆசைகளைக் குப்பையைப் போல மனத்தில் போட்டு வைத்துக் கொள்வதால் நன்மை இல்லை.

மனஅமைதி போய் விடும். மனத்தில் உள்ள பலம் போய்விடும். செயல்திறன் குன்றிப் போகும். உடல் நலம் குன்றிப் போகும்.

நற்குணங்கள் போகும். எரிச்சலும், கோபமும் அடிக்கடி வரும். முகத்தில் தெளிவுபோய், சோகம் படிந்து விடும்.

மனம் கலகலப்பாக இருக்காது. ஆசையை அடக்கினால், அது பிதுங்கிக் கொண்டு வெவ்வேறு துன்பங்களாக உருவாகும். ஆராய்ந்தால், பிறந்த இடத்திலேயே அது ஒடுங்கும்.

ஆசை நிறைமனமானால் மற்ற எல்லா நலன்களையும் பெறுவது எளிதாகி வாழ்வின் இலட்சியமே நிறைவேறிய ஓர் உணர்வு உண்டாகும்.

எனவே, ஆசையைச் சீரமைப்போம்.

"இச்சை எழும்போதே காரணம் கண்டிடு.
இச்சை முடித்திடச் சூழ்நிலை பார்த்திடு.
இச்சை முடிந்தால் எழும்விளைவை யூகி.
இச்சை முறையாய் இயங்கும்அமைதியிலே." -
வேதாத்திரி மகரிஷி

## 10.மௌனம் எனும் ஞானவரம்வு

### தாவோ தே ஜிங் - வசனம் 56

- தெரிந்தவன் பேசுவதில்லை. பேசுகிறவன் தெரிந்தவனில்லை. எனவே, ஞானி வாயைத்திறப்பதில்லை. உணர்வுகளும் கதவைத் திறப்பதில்லை.
- வாயை மூடிக்கொண்டு இருங்கள்.உங்கள் புலன்களைக் காத்துக்கொள்ளுங்கள்....... (சில வரிகள் நீக்கப்பட்டுள்ளது)..
- இந்தநிலையை அடைந்தவரிடம் அவமானம், பாராட்டு, நன்மை,தீமை, அணுகமுடியாது. இப்படியாக உலகம் மதிப்பவராகிறார்.

### வேதாத்திரியம் தரும்மௌனத்தின் மேன்மை:

"நாம் பேசாதிருக்கும் போது இறைவன் நம்மோடு பேசுகிறான்."

இப்படிச் சொல்வது வேறு ஒன்றுமில்லை.

எப்போதும் அவன் இருக்கிறான், அவன் பேசுகிறான், அதைக் கேட்பதற்கு இல்லாமல் நாம் வேறு எதையோ கேட்டுக் கொண்டிருந்தால் அவன் பேசுவது கேட்பதில்லை.

அதனால் நம் வேலைகளையெல்லாம் நிறுத்திவிட்டு கொஞ்சநேரம் மௌனம் இருக்க வேண்டும்.

ஒவ்வொருவரிடமும் எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு ஆயிரம் தேவையில்லாத கருத்துகள் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

ஒரு நாளைக்கு மௌனத்தில் உட்கார்ந்தீர்களானால் தானே வரும்.

அதில் பத்து பதினைந்து கருத்துகளை எடுத்து முடிவு கட்டுங்கள்.

ஓரிரு மாதங்களில் முடிவு பண்ணிவிடலாம்.

மறுபடியும் அதே கருத்து வரும் போது அதே அழுத்தம் கொடுத்து கெட்டக் கருத்துகள், செயல்கள், எண்ணங்கள் எத்தனை உண்டோ அத்தனையும் நல்லதாக்கி விடலாம்.

இதற்கு உட்கார்ந்து யோசித்துப் பார்த்தால்தானே நேரம் கொடுத்தால் தானே வரும்?

சிலருக்கு ஒரு நாளைக்குக் கூட உட்கார முடியவில்லையே என்று மன வருத்தம் இருக்கிறது.

அதற்காக வருந்தவே வேண்டியதில்லை.

யாராகிலும் ஒருவர் நமக்குத் தேவை இல்லாத வார்த்தையைச் சொன்னார்கள்.

அதற்குப் பதில் சொல்லாமல் எரிந்து விழறது என்று இல்லாமல் அந்த இடத்தில் மாத்திரம் மௌனம் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளலாம் இல்லையா?

இதற்கு நேரம் தேவையில்லை.

எப்படி கண்ணாடி அதிகமான சூரிய வெளிச்சத்தை வாங்கி

மற்றதை எரிக்கக்கூடிய வல்லமை பெறுகிறதோ அதேபோல

மௌனத்தில் ஏற்படக் கூடிய (Vortex) சுழல் மையம் நம்முடைய

ஜீவகாந்த சக்தி அதிகமாக ஆக ஆக அதில் சுழற்சி அதிகமாக

ஆக ஆக மைய ஈர்ப்பு அதிகமாகும். அந்த மைய ஈர்ப்பு

அதிகமாகி விட்டதென்றால் எண்ணங்களையும்

ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.

மற்றவர்களுடைய நட்பும் அதிகமாக இருக்கும்.

எல்லோருக்கும் உங்கள் பேரில் விருப்பமும் மதிப்பும் தானாகவே உருவாகும்.

# 11.அன்பின் அடிப்படையில்

## தாவோ தே ஜிங் – வசனம் 67 :

- அன்பின் அடிப்படையில் போராடுபவன் போரில் வெற்றிபெறுவான்;
- அன்பின் அடிப்படையில் தன்னை காத்துக் கொள்பவன் பத்திரமாக இருப்பான்.
- வானகம் அவனை காப்பாற்றும், வானகம் அவனை அன்புடன் பாதுகாக்கும்.

வேதாத்திரியத்தில் அன்பு

“அனைத்துயிரும் ஒன்றென்று
   அறிந்த அடிப்படையில்
ஆற்றும் கடமையெல்லாம்
   அன்பின் செயலாகும்.” (ஞாக.584)

“இறையுணர்வால், அறிவடைந்த முழுமைப் பேற்றால்,
   இயங்கும்பல உயிரிடத்தும் மலரும் நட்பை
மறையுணர்ந்தோர் அன்புஎன்பர். மனித உள்ளம்
   மாண்பு பெற்ற நிலைஇதுவே. அமைதி வித்து.” (ஞாக.588)

# 12.கொடுங்கோல் ஆட்சி வேண்டாம்

## தாவோ தே ஜிங் – வசனம் 75

- மக்கள் பட்டினி கிடக்கிறார்கள்.அவர்களிடம் கடுமையான வரிகளை அதிகாரிகள் வசூல் செய்கிறார்கள்.எனவே, மக்கள் பட்டினி கிடக்கிறார்கள்.
- மக்களை ஆள்வது கடினம்.
- அவர்களின் விஷயங்களில் அனாவசியமாக அதிகாரிகள் தலையிடுகிறார்கள்.
- எனவே, மக்களை ஆள்வது கடினம்.....

கொடுங்கோல் ஆட்சி வேண்டாம் என்கிறது வேதாத்திரியம்

“அடிமரத்தை மேல்கிளையில் நின்று வெட்டும்
   அறியாமை ஒக்கப்பலர் வாழ்வ தாரப்
படிகளெனும் உணவுஉடை, வீடு மூன்று
   பாடுபட்டுத் தோற்றிடுவார், பயன் கவர்ந்து
மிடியால்அன் னார்வாட, நிர்வாகத்தோர்
   மேலோர்கள் எனும்நிலையைத் தோன்று வித்துக்
கொடியசெயல் கள் வாழ்வில் அதி கரிக்க,

கொடுங்கோலாய் ஆட்சியினை மாற்றி விட்டார்.” (ஞாக.131)

வறுமையைப் பொறுத்திட,
வல்லவரோ எல்லோரும்?
பொறுமைதான் கொண்டாலும்
பொறுக்குமோ உடல் குடும்பம்?
சிறுமை பிறர்பால் பேசிச்
சீறும் ஆட்சி நடிகர்களே!
பெறுகின்றீர் கை தட்டல்!
பிற்பட்டோர்க் கென் செய்தீர்?” (ஞாக.140)

## 13.இருத்தலின்மை என்பது வானக, வையகத்தின் தோற்றுவாய்

'தாவோ' என்பதற்குப் பல பொருள்கள் இருக்கின்றன, அவற்றுள் இந்த நூலின் தலைப்புக்குப் பொருத்தமானது 'வழி' என்னும் பொருள் ஆகும். '

தே'வுக்கு 'நேர்மைக்கு உந்துதல் அல்லது ஊக்கம் தேவை' என்று இப்புத்தகத்தில் பொருள் கூறப்பட்டிருக்கிறது.

'ஜிங்' என்றால் நூல் என்று பொருள். ஆக, 'தாவோ தே ஜிங்' என்றால் 'தாவோ'வையும் 'தே'யையும் பற்றிய நூல் என்று பொருள்படும்.
'தாவோ தே ஜிங்' புத்தகத்துக்குப் பல பரிமாணங்கள் இருக்கின்றன. இயற்பியல் கண்ணோட்டத்திலிருந்தும் அதனைப் பார்க்கலாம்;

உதாரணத்துக்குப் பிரபஞ்சத்தின் தோற்றம் குறித்த 'தாவோ தே ஜிங்'கின் பாடல்கள் இன்றைய அறிவியலுக்கு ஒரு புதிராகவே காட்சியளிக்கின்றன:

‘இருத்தலின்மை என்பது
வானக, வையகத்தின்

தோற்றுவாய் எனப்படுகிறது

..............................................

இருத்தலின்மையும் இருத்தலும்
ஆதியில் ஒரே மாதிரி;
ஆனால், வெளிப்படும்போது
வேறு வேறு.
இந்த ஒற்றுமை நுண்மையின் நுண்மை எனப்படுகிறது.'

என்ற பாடலிலும்,

'பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும்
இருத்தலிலிருந்து வருகின்றன;
இருத்தல்
இருத்தலின்மையிலிருந்து வருகிறது'

என்ற பாடலிலும் நவீன இயற்பியல் பேசும் ஒருமைக்கணத்துக்கு (singularity), அதாவது பிரபஞ்சத்தின் தோற்றம் நிகழ்வதற்குக் காரணமாகக் கருதப்படும் பெருவெடிப்பு (big bang) நிகழ்வதற்கு முந்தைய கணத்துக்கு நெருக்கமான கருத்துகளைக் காணலாம்.

இந்தப் பாடல்களுக்கு இணையான ஒரு பாடலாக ரிக் வேதத்தின் நாஸ்திய சூக்தத்தின் பாடலை (nAsadiya sUkta - Rig Veda 10:129) கருதலாம்.

## வேதாத்திரிய சுத்தவெளி

### வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம்

இறையுணர்வு பெற்றவர்கள் இதுவரையில் தெளிவாக மொழி வழியிலும், பயிற்சி வழியிலும் கொடுத்துள்ள உண்மை விளக்கம் என்னவென்றால்,சுத்தவெளியாகிய இறைநிலையே முடிவான அருட்பேராற்றலான தெய்வமாகும் என்பதாகும்.

சுத்தவெளியானது

(1) வற்றாயிருப்பு,

(2)பேராற்றல்,

(3)பேரறிவு,

(4)காலம்

என்கின்ற நான்கு வளங்களை உடையதாக இருக்கிறது.

## வற்றாயிருப்பு

சுத்தவெளியாகிய பெருவெளியில் இருந்து அணு முதலாக அண்டங்கள் மற்றும் உயிரினங்கள் எவ்வளவு தோன்றினாலும் சுத்தவெளியோ, அதனுடைய ஆற்றலோ எந்த அளவிலும் குறைவுபடாது.

- இந்த உண்மையை விளக்குகின்ற வார்த்தைதான் வற்றாயிருப்பு ஆகும்

## பேராற்றல்

பலகோடி சூரியக் குடும்பங்களை உடைய இந்த பேரியக்க மண்டலத்தில் உலவுகின்ற அனைத்தையும் இதே சுத்தவெளிதான் தாங்கிக் கொண்டு இருக்கிறது.

- இதனால் சுத்தவெளியை பேராற்றல் என்று கூறுகிறோம்.

## பேரறிவு

எந்தப் பொருளிலும், எந்த இயக்கத்திலும் இதே சுத்தவெளிதான் ஊடுருவி நிறைந்து ஒழுங்காற்றலாக, செயல் புரிந்து வருகிறது.

- இந்த ஒழுங்காற்றல்தான் அறிவு என்று கூறப்படுகிறது. ஒவ்வொரு தோற்றத்திலும்,உருவ அமைப்பு,குணங்கள் மற்றும் காலத்தால் காலம் என்ற அதிர்வால் ஏற்படக்கூடிய மாற்றங்கள் அனைத்தும் நிகழ்கின்றன.
- இதனால் சுத்தவெளியானது பேரறிவு என்று விளக்கப்படுகிறது.

## காலம்

சுத்தவெளியானது தன்னிறுக்க அழுத்தமாக உள்ளதால், அது தன்னைத்தானே விட்டுவிட்டு அழுத்தும்போது, அதுவே நுண்ணதிர்வாகச் செயல்புரிகிறது.

- இந்த நுண்ணதிர்வு என்ற காலத்தின் நுண்ணிய அலகானது கண்சிமிட்டும் நேரம்போல மிகக் குறைவானதாகும்.
- இந்த அதிர்வு இறைநிலையில் அடங்கி இருப்பதனால் எல்லாப் பொருள்களுக்கும் தோற்றம், வளர்ச்சி, முடிவு என்ற செயல்கள் உண்டாகின்றன.
- இதனால் இறையாற்றலை காலம் என்று சொல்கிறோம்.
- ஆகவே இறையாற்றல் என்ற பெருவெளி வற்றாயிருப்பாக இருக்கிறது. பேராற்றலாக இருக்கிறது. பேரறிவாக இருக்கிறது. அதுவே காலமாகவும் இருக்கிறது.

## இறைநிலை - வேதாத்திரியம்

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் எனும்
    வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வமாம்
வற்றாத இந்நான்கும் விண்முதல் ஐம்பூதங்கள்
    வான்கோள்கள், உலகம், உயிரினம் ஓரறிவு முதல் ஆறாம்
வற்றாது பெருகிவரும் வளர்ச்சியே பரிணாமம்
    வந்தவை அனைத்திலும் சீரியக்கம் இயல்பூக்கம்
வற்றாது பெருகும் பேரண்டத்தில் உயிர்வகையில்
    வழுவாத செயல்விளைவு நீதியே கூர்தலறம் உண்மை,உண்மை”
(ஞானக்களஞ்சியம் பாடல் 1666)

நவீன இயற்பியலுக்கும் கீழைத்தேசங்களின் மெய்யியலுக்கும் உள்ள இதுபோன்ற ஒப்புமைகளை ‘இயற்பியலின் தாவோ’ (The Tao Of Physi cs) என்னும் நூலில் ஃப்ரிட்ஜாஃப் காப்ரா எழுதியிருக்கிறார்.

அறிவியலுக்கும் மெய்யியலுக்கும் முடிச்சுப் போடுவது பெரும் சிக்கல்.

இன்றைய வாழ்க்கை முறைக்கு 'தாவோ தே ஜிங்' எவ்வளவு அவசியமானது என்ற கண்ணோட்டம் எல்லாவற்றையும்விட முக்கியமானது.

இன்றைய வாழ்க்கை முறை அதன் எல்லா பரிமாணங்களிலும் மிகமிக வேகமாகச் சென்றுகொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது.

மனிதர்களால் கட்டுப்படுத்த முடியாத வேகம்; வேகம்தான் அவர்களை அழைத்துச் செல்வதைப் போன்று தோன்றுகிறது.

வேகம் குறைந்தாலோ அல்லது நின்றாலோ மனிதர்கள் பதற்றாமாக ஆகிவிடுவார்கள் போன்று தோன்றுகிறது. வேகம்தான் மனிதர்கள், மனிதர்கள்தான் வேகம்.

## 14.மனிதன் மனிதன்

- தாவோ மிதத்தைப் பற்றி மட்டுமே பேசுகிறது; மெலிவைப் பற்றி மட்டுமே பேசுகிறது; குறைவைப் பற்றி மட்டுமே பேசுகிறது; தேய்வைப் பற்றி மட்டுமே பேசுகிறது. வலியது, கடினமானது, அதீதம், மூர்க்கம் எல்லாம் மரணத்தின் அறிகுறிகள் என்கிறது: (தாவோ)

பிறவியின் நோக்கம் வெற்றி பெறும் – வேதாத்திரியம்

மனிதனாய்ப் பிறந்தவர்கள் எல்லோரும், வாழ்வில்
மண்ணுலகப் பொருள்வளமும் புலன்இன்பம் துய்த்து
புனிதமெனும் இறையுணர்ந்து. பிறவித்தொடர் போக்க
பொருந்திய வாற்றிவு உடல் ஆற்றல்கள் உளன.
தனிபிரிவாய் சிலர் தெய்வத் தொண்டேற்று, உலகைத்
தங்கள் விருப்பமொக்கத் தடம்மாற்றி விட்டார்.
இனியென்ன, இறையருளெ அனைத்தியக்க ஆற்றல்

எனும்நூலாய் வந்துள்ளது. ஏற்றுப்பயன் காண்போம்."
(ஞாக.பா.1732)

## 15.நன்மை தீமை

- ‘அழகாயிருப்பது அழகு என்று
  எல்லோரும் புரிந்துகொண்டால்
  விகாரம் தோன்றுகிறது.
  நன்மையை நன்மை என்று
  எல்லோரும் புரிந்துகொண்டால்
  தீமை தோன்றுகிறது.’ (தாவோ)

ஒருவர் குழம்பிப்போகலாம்; என்ன இது. நன்மையை நன்மை என்று புரிந்துகொள்வதுதானே நல்லது. இங்கே அது தீமை என்றல்லவா சொல்லப்படுகிறது?
நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், நன்மை, அழகு போன்ற விஷயங்களெல்லாம் பிரக்ஞைபூர்வமானவை அல்ல. அவை இயல்பானவை.

அழகாக இருப்பது அழகு என்பதால் அழகாக இருக்க முயல்வதும், நன்மை செய்வது நன்மை என்பதால் நன்மை செய்ய முயல்வதும் இயல்புக்கு அதாவது தாவோவுக்கு எதிரானது.

நன்மை என்று ஒன்றைக் கருதும்போது தீமையும் அழகு என்று ஒன்றைக் கருதும்போது அந்த இடத்தில் விகாரமும் தோன்றிவிடுகிறது.

கடவுள் என்று நினைத்தால் சாத்தான் தோன்றிவிடுகிறது அல்லவா? அதுபோலத்தான் இதுவும்.
தாவோ, ஜென் எல்லாமே அறிவை மிகவும் எதிர்க்கின்றன. அறிவு இயல்புக்கு எதிரானது என்று கருதப்படுகிறது. முரண்படுவதுபோல் நமக்குத் தென்படுகிற வேறுசில கருத்துகளையும் தாவோ முழுவதும் காணலாம்.

## நன்மை தீமை வேதாத்திரியம்

**நன்மையும் தீமையும் செயல்களில் இல்லை. செய்யும் செயல் என்னென்ன விளைவுகளைத் தருமோ, அந்த விளைவைக் கொண்டு தான் நன்மையும் தீமையுமாகப் பிரித்துப் பார்க்கிறோம்.**

அது நன்மையான விளைவாக இருந்தால் 'புண்ணியம்' என்றும், தீமையான விளைவாக இருந்தால் 'பாவம்' என்றும் கூறுகிறோம்.

பசி எடுக்கிறது. உணவு சாப்பிட்டுப் பசியைப் போக்கிக் கொள்கிறோம்.

ஆனால், நாவுக்குச் சுவையாகவும், நன்றாகவும் இருக்கிறது என்பதற்காக அதிகப்படியாக உண்டால் என்ன ஆகும்? அந்த உண்ட உணவே தீமையை உண்டாக்குகிறது.

ஆகவே, செயலில் பாவம், புண்ணியம் இல்லை. செயல்களின் விளைவைத்தான் கவனிக்க வேண்டும்.

இதற்கு ஒரு **சாம்யம்** (Formula) கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது புண்ணியம் எது? பாவம் எது? என்று சிந்திக்க வேண்டும்.

புண்ணியம் எது? எண்ணம், சொல், செயல் ஆகிய ஏதொன்றாலும் தனக்கோ, பிறர்க்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, அறிவிற்கோ, உடலுக்கோ துன்பம் தராது, விழிப்போடு, துன்பங்கள் நீக்கும் வகையில் செய்யப்படும் செயல்கள் யாவும் புண்ணியத்தின் பாற்படும்.

பாவம் எது? ஒருவரது எண்ணம், சொல், செயல் இவைகளினால் எதனாலேனும் தனக்கேனும், பிறருக்கேனும் அன்றைக்கோ, பிற்காலத்திலோ, உடலுணர்ச்சிக்கோ, பகுத்தறிவுக்கோ துன்பம் விளைவதாக இருந்தால் அத்தகைய செயல்கள் பாவம் என்பதாகும்.

## 16.முழுமையாய் இருப்பது ....எப்படி?

சான்றோரைப் பெருமைப்படுத்தக் கூடாது என்கிறது தாவோ; அபூர்வமான பொருள்களை மதிக்கக் கூடாது என்கிறது; சாகசத்தில் ஈடுபடுபவன் அழிவான் என்கிறது.

- ‘தாழ்மையாக இரு;
  அப்போது நீ முழுமையாக இருப்பாய்

வளைந்திரு;
அப்போது நீ நேராக இருப்பாய்
காலியாக இரு;
அப்போது நீ நிரம்பி இருப்பாய்
தேய்ந்துபோய் இரு;
அப்போது நீ புதிதாக இருப்பாய்'

என்றும்,

- 'புலமையைக் கைவிடு;
  அப்போது,
  துக்கம் தெரியவராது.
  புனிதத்தைக் கைவிடு;
  புத்திசாலித்தனத்தைத் தூக்கியெறி;
  அப்போது,
  மக்கள் பல மடங்கு பலன் பெறுவார்கள்.
  கருணையைக் கைவிடு;
  நியாயத்தைத் தூக்கியெறி'

என்றும்

- 'வாசலைத் தாண்டிப் போகாமலே
  உலகம் அனைத்தையும்
  ஒரு மனிதன் தெரிந்துகொள்ள முடியும்." (தாவோ)

## வேதாத்திரியத்தில் முழுமை

சின்னஞ் சிறு செல்கள் சேர்ந்திணைந்து ஒத்துழைத்து
சிந்தனைக்கெட்டாச் செயல்கள் சிறப்புடலில் நிகழ்த்துவன
முன்னம் ஒரு துளியான மூலவிந்து நாதத்தால்
முழுமையாய் எனது உடல் முற்றறிவின் திருவருளால்
சூட்சுமமாய்க் குறுகி நின்று தொடங்கியது தன் வளர்ச்சி
சொல்லரிய மறைபொருளாய்த் தொடர்ந்துவரும் வினைக்கேற்ப
ஆட்சியின்றி ஆளுகின்ற ஐயன் திருவருளால்
அன்னைக் கருப்பை விடுத்து அடைந்து விட்டேன் மண்ணுலகை.
- வேதாத்திரி மகரிஷி

சின்னஞ் சிறு செல்கள் பல சேர்ந்து இணைந்து மிக அற்புதமாக இந்த உடலை வடிவமைத்துள்ளது இறைநிலையின் திருவிளையாடலே!

தந்தை தாய் இருவரின் விந்து நாத துளிகள் இணைந்து அன்னையின் கருப்பையில் நிகழ்த்திய அற்புதமே

இந்த உடல். எல்லா தோற்றங்களையும் தன்னகத்தே வைத்து காத்தும், இரட்சித்தும் வருகின்ற இறைநிலையானது சூக்குமமாக இருந்து, பெற்றோரின் வினைகளுக்கேற்ப இந்த உருவத்தை உருவாக்கி, முழுமையாக்கி அன்னை வயிற்றிலிருந்து மண்ணுலகுக்கு அனுப்பியதன் நோக்கம் வினைப் பதிவுகளைப் போக்கி மீண்டும் மனிதன் தன்னகத்தே இணைந்து முழுமைப் பேறு என்கின்ற உயர் நிலை அடைவதற்கே!

ஆனால் இதை உணராத மனிதன் தேவைகளை மட்டும் கருத்தில் கொண்டு அன்னமய, மனோமய கோசத்தில் உழன்றுகொண்டு, இன்பத்தை எதிர்பார்த்து துன்பத்தை அனுபவிக்கிறான்.

இந்நிலையிலிருந்து மனிதனை மீட்டு, பிராணமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசத்துக்கு உயர்த்தி, பிறவியின் நோக்கத்தை நிறைவு செய்ய உதவுபவரே ஞானி, மகான், சத்குரு.

எனவே தாவோசிய தத்துவங்களையும் வேதாத்திரிய சிந்தனைகளையும் ஏற்று பிறவியின் நோக்கத்தை உணர்ந்து புரிந்து ஆனந;தமாக வாழ்வோமாக!

## துணைநின்ற நூல்கள்


- ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரியப் பதிப்பகம், ஈரோடு
- உலக சமாதானம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரியப் பதிப்பகம், ஈரோடு

- வேதாத்திரியத் தத்துவங்கள் மன்னார்குடி பானுகுமார், இணையதளம் www.banukumar.in
- ஞாலம் போற்றும் ஞானிகள்,மன்னார்குடி பானுகுமார்,
- ஞானதீபமும் ஞானஒளியும், மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
- வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
- இணையதளம் தாவோயிசம்
- Tao: The Way - **லாவோ சீ**
- Dao De Jing: The Book of the Way **லாவோ சீ**
- The Complete Tao Te Ching with the Four Canons of the … **லாவோ சீ**

# பானுகுமார் படைப்புலகம்

## Free PDF www.banukumar.in




**ஆன்மீகம்**

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது

13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷா் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை
28. வேதாத்திரியத்தில் அறம்

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரிஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்சிதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுமானவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?

28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## வரலாறு மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. மன்னார்குடி வரலாறு

## பயண நூல்கள்

1. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
2. அமெரிக்க மண்ணில் ஆறு மாதங்கள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்

4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்
3. தொலைந்து போன உறவுகள்
4. பத்மாவும் கதவும்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## பானுகுமார் படைப்புலகம்

1. நானும் என் எழுத்தும்
2. நீங்களும் எழுதலாம் வாங்க
3. புத்தகம் எழுதலாம் வாங்க
4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க
6. நான் ஏன் எழுதுகிறேன்

## கம்பனும் வேதாத்திரியமும்

1. கம்பனும் வேதாத்திரியமும் 1 (இலக்கிய திறனும் கருத்தியலும்)
2. கம்பனும் வேதாத்திரியமும் 2 (நாடும் அரசும்)
3. கம்பனும் வேதாத்திரியமும் 3 (இறை சிந்தனைகள்)
4. கம்பனும் வேதாத்திரியமும் 4. (மானுடம் வென்றதம்மா)

## உலகப் புகழ்பெற்ற தத்துவஞானிகளும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு இலக்கியம்)

1. டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும்

2. ஹிப்பாக்ரட்ஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
3. ஹென்றிவேர்ட்ஸ்வொர்த் லாஜ்பெலோவும் வேதாத்திரி மகரிஷியும்
4. பெர்ட்ராண்ட் ரசல்லும் வேதாத்திரி மகரிஷியும்
5. கலில் ஜிப்ரானும் வேதாத்திரி மகரிஷியும்
6. தஸ்தயேவ்ஸ்கியும் வேதாத்திரி மகரிஷியும்
7. ஜலாலுதீன் ரூமியும் வேதாத்திரி மகரிஷியும்
8. லாவோசும் வேதாத்திரி மகரிஷியும்
9. ஷேக்ஸ்பியரும் வேதாத்திரி மகரிஷியும்
10. சாக்கரட்டிஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
11. அரிஸ்டாடிலும் வேதாத்திரி மகரிஷியும்
12. பிளேட்டோவும் வேதாத்திரி மகரிஷியும்
13. செனகாவும் வேதாத்திரி மகரிஷியும்
14. மிர்தாவின் புத்தகமும் வேதாத்திரியமும்
15. நீட்சேயும் வேதாத்திரி மகரிஷியும்
16. கன்பூசியனிசமும் வேதாத்திரி மகரிஷியும்
17. தாவோயிசமும் வேதாத்திரி மகரிஷியும்
18. சர் ஐசக் நியுட்டனும் வேதாத்திரி மகரிஷியும்
19. வால்டேரும் வேதாத்திரி மகரிஷியும்
20. ரால்ப் வால்டோரா எமர்சனும் வேதாத்திரி மகரிஷியும்
21. சார்லஸ் டார்வினும் வேதாத்திரி மகரஷியும்.
22. காரல் மார்க்ஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
23. இராபர்ட் கிரீன் இங்கர்சாலும் வேதாத்திரியும்.
24. சிக்மண்ட் பிராய்டும் வேதாத்திரி மகரிஷியும்.
25. ஜேம்ஸ்ஆலனும் வேதாத்திரி மகரிஷியும்.
26. ஐன்ஸ்டைனும் வேதாத்திரி மகரிஷியும்
27. கன்பூசியஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
28. பெஞ்சமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்

29. ரூஷோவும் வேதாத்திரி மகரிஷியும்
30. மார்கஸ் அரேலியஸ்ஸிம் வேதாத்திரி மகரிஷியும்
31. ஹிராக்ளிடஸ்ஸிம் வேதாத்திரி மகரிஷியும
32.எபிகோரஸ்ஸிம் வேதாத்திரி மகரிஷியும்
33.மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
34. ரூல்வெல்ட்டும் வேதாத்திரி மகரிஷியும்

## WORLD BEST 34 PHILOSOPHERS AND

## VETHATHIRI MAHARISIH

## A COMPARATIVE STUDY

1. Leo Tolstoy and Vethathiri Maharis
2. HIPPOCRATES and Vethathiri Maharisi
3. HENRY WADSWORTH LONGFELLOW and Vethathiri Maharisi
4. *Bertrand Arthur William Russel* and Vethathiri Maharisi
5. Kgakuk Zibran and Vethathiri Maharisi
6. Fyoror Dostoevsky and Vethathiri Maharisi
7. Roomi and Vethathiri Maharisi
8. Laozi and Vethathiri Maharisi
9. William Shakespeare and Vethathiri Maharis
10. Socrates and Vethathiri Maharisi
11. Aristotle and Vethathiri Maharisi
12. Plattoo and Vethathiri Maharisi
13. Seneca and Vethathiri Maharisi
14. Book of Mrrda and Vethathiria

15. Friedrich Wilhelm Nietzsche and Vethathiri Maharisi
16. Confucius Confucianism and Vethathiri Maharisi
17. Taoism and Vethathiri Maharisi
18. Sir Issac Newton and Vethathiri Maharisi
19. Voltaire and Vethathiri Maharisi
20. Emerson and Vethathiri Maharisi
21. Charles Darwin and Vethathiri Maharisi
22. Karal Marky and Vethathiri Maharisi
23. Robert G. Ingersol and Vethathiri Maharisi
24. Sigmund Freud and Vethathiri Maharisi
25. James Alen and Vethathiri Maharisi
26. Albert Einstein and Vethathiri Maharisi
27. Confucius and Vethathiri Maharisi
28. **Benjamin** Franklin and Vethathiri Maharisi
29. Rousseau and Vethathiri Maharisi
30. Marcul Aurelius and Vethathiri Maharisi
31. Heroklatise and vethathiri Maharishi
32. **Epikuras** and vethathiri Maharishi
33. **Machavelli and Vethathiri Maharishi**
34. Franklin D. Roosevelt **and Vethathiri Maharishi**